**ஏப்ரல் – 06**

# TNPSC துளிகள்

- நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் வனவிலங்குப் பாதுகாப்பு பகுதியில் உள்ள கோடியக்கரை மற்றும் ஆற்காட்டுதுறை குஞ்சுப் பொரிப்புத் தளங்களிலிருந்து 7,100க்கும் மேற்பட்ட சிற்றாமைக் குஞ்சுகள் கடலில் விடப் பட்டுள்ளன.
- சென்னையில் ஜெர்மனி நாட்டுத் தத்துவஞானி மற்றும் சமூகவுடைமை (சோசலிச) தலைவர் கார்ல் மார்க்ஸின் சிலை மற்றும் மறைந்த அகில இந்திய பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவரான P.K. மூக்கையா தேவருக்கு மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் நினைவுகம் ஆகியவை நிறுவப்படும் என்று தமிழக முதல்வர் அறிவித்துள்ளார்.
- புதுச்சேரியில் செயற்கைக் கரு மாற்ற (IVF-ET) தொழில்நுட்பத்தின் மூலம் கருப்பெற்ற முதல் கன்று வில்லியனூர் அருகே உள்ள கனுவாப்பேட்டை கிராமத்தில் பிறந்துள்ளது.
- தெலுங்கானா பகுதியில் விளையும் வாரங்கல் சப்பாட்டா மிளகாய் அல்லது தக்காளி மிளகாய் என அழைக்கப்படும் வாரங்கல் சப்பாட்டா மிளகாய்க்கு சென்னைப் புவி சார் குறியீட்டு ஆணையத்தினால் புவிசார் குறியீடு வழங்கப் பட்டுள்ளது.
- ஆண்டிற்கு இரண்டு முறை நடைபெறும் ராணுவத் தளபதிகள் மாநாடு ஆனது புது டெல்லியில் நடைபெற்றது.
- குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள ஜமால்பூரைச் சேர்ந்தக் கைவினைஞர் கலைஞர்களால் தயாரிக்கப்பட்டப் புகழ்பெற்ற சௌதாகரி அச்சு வேலைப் பாடுகள் கொண்ட துணிகள், அதன் தனித்துவமான கைவினைத் திறனுக்காக புவிசார் குறியீட்டினைப் (GI) பெற்றுள்ளது.
- டாடா சன்ஸ் நிறுவனத்தின் தலைவரான N. சந்திரசேகரன், சர்வதேச நாணய நிதியத்தின் மேலாண்மை இயக்குநரின் தொழில்முனைவோர் மற்றும் அதன் வளர்ச்சி ஆலோசனைக் குழுவில் இணைந்துள்ளார்.
- ஜோர்டானின் அம்மான் நகரில் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டு ஆசிய மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா 1 தங்கம், 3 வெள்ளி, 6 வெண்கலம் என 10 பதக்கங்களைப் பெற்றுள்ளது.
- தவறான தகவல்களைக் கண்டறிந்து, இயங்கலையில் தவறான தகவல்கள் பரவுவதை எதிர்த்துப் போராடுவதற்காக ஏப்ரல் 02 ஆம் தேதியன்று சர்வதேச உண்மைச் சரிபார்ப்பு தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 6 புதிய புவிசார் குறியீடுகள் – தமிழ்நாடு

- தமிழ்நாட்டில் மட்டும் தயாரிக்கப்படும் மிக தனித்துவமான ஆறு தயாரிப்புகளுக்குப் புவிசார் குறியீடு (GI) வழங்கப்பட்டுள்ளது.

- இதில் பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, புளியங்குடி எலுமிச்சை, விருதுநகர் சம்பா மிளகாய் வத்தல் (வரமிளகாய்), செட்டிகுளம் சின்ன வெங்காயம் மற்றும் இராமநாதபுரம் சித்திரைக்கார் அரிசி ஆகியவை அடங்கும்.
- இந்தப் புதிய சேர்க்கைகளின் பிறகு, மாநிலத்தில் புவிசார் குறியீடு பெற்ற மொத்தத் தயாரிப்புகளின் எண்ணிக்கை 69 ஆக உயர்ந்துள்ளது.
- உத்தரப் பிரதேச மாநிலத்திற்கு (79) அடுத்தபடியாக, அதிகப் புவிசார் குறியீடு பெற்ற தயாரிப்புகளைக் கொண்ட மாநிலமாக இரண்டாவது இடத்தில் உள்ளது.

**6 மண்சார் உணவுப் பொருட்களுக்கு புவிசார் குறியீடு!**

**தமிழ்நாட்டில், செட்டிக்குளம் சின்ன வெங்காயம், பண்ருட்டி பலாப்பழம், பண்ருட்டி முந்திரி, புளியங்குடி எலுமிச்சை, விருதுநகர் சம்பா வத்தல், ராமநாதபுரம் சித்திரை கார் அரிசி ஆகிய 6 பொருட்களுக்கு புவிசார் குறியீடு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.**

**இதன்மூலம், தமிழ்நாட்டின் புவிசார் குறியீடு அங்கீகாரம் பெற்ற பொருட்களின் எண்ணிக்கை 69 ஆக உயர்ந்துள்ளது.**

## தூய்மைத் திட்டம் 2025


தூய்மை
THOOIMAI

- மாநிலத்தில் நிலையான கழிவு மேலாண்மைக்காக 'தூய்மைத் திட்டம்' என்ற மாநில அளவிலான திட்டத்தினை உருவாக்க தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.
- தூய்மையான தமிழ்நாடு கம்பெனி லிமிடெட் (CTCL) ஆனது, இந்தத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் அரசு உத்தரவிட்டுள்ளது.
- பல துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்போடுச் சேர்த்து, தலைமைத்துவம், கொள்கை வழிகாட்டுதல், கொள்கை வடிவமைப்பு மற்றும் ஒப்புதல் வழிகாட்டுதல்கள் ஆகியவற்றை இந்தத் திட்டம் வழங்கும்.
- இதில் மாநில அளவிலான நிர்வாகக் குழுவின் ஒரு தலைவராக தலைமைச் செயலாளர் செயல்படுவார்.
- இதில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு மாவட்ட அளவிலான தூய்மைக்

குழுவானது இடைநிலை நிர்வாக அலகாகச் செயல்படும்.

- இதில் தொகுதி அளவிலான / நகர்ப்புற உள்ளாட்சி அளவிலான ஒரு தூய்மைக் குழுவும் நியமிக்கப்படும்.
- தற்போது கிளீன் தமிழ்நாடு கம்பெனி லிமிடெட் (CTCL) என்ற நிறுவனமானது ஊரக மேம்பாட்டு மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழ் உள்ளது.
- இது சிறப்புத் திட்ட அமலாக்கத் துறைக்கு மாற்றப்பட உள்ளது.

## தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி சபை




- தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆனது, தமிழ்நாடு வரலாற்று ஆராய்ச்சி சபைக்கு என ஒரு துணைத் தலைவரையும் மேலும் அதில் ஐந்து உறுப்பினர்களையும் பரிந்துரைத்துள்ளது.
- துணைத் தலைவர் தலைமையின் கீழ், இந்தச் சபையில் ஐந்து அறிஞர்கள் இடம் பெற்றிருப்பர்.
- தமிழ்நாடு ஆவணக் காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சி ஆணையர் இந்தச் சபையின் துணைத் தலைவராக இருப்பார்.
- மற்ற உறுப்பினர்கள் –
    - தொல்லியல் துறையில் புகழ் பெற்ற அறிஞர், ஆராய்ச்சியாளர் R. பாலகிருஷ்ணன்;
    - காலனித்துவ வரலாற்றில் மிகப் புகழ்பெற்ற அறிஞர் மற்றும் ஆராய்ச்சியாளர் S. ஜெயசீலன் ஸ்டீபன்;
    - சுதந்திரப் போராட்டத்தில் மிகப் புகழ்பெற்ற அறிஞர் மற்றும் ஆராய்ச்சியாளர் K.A. மணிகுமார்;
    - தி இந்து இதழின் மூத்த துணை ஆசிரியர் P. கோலப்பன், பத்திரிகையாளர், மற்றும்
    - A.R. வெங்கடாசலபதி, சென்னை மேம்பாட்டு ஆய்வு கல்வி நிறுவனப் பேராசிரியர்.

## புதிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள்

- தமிழ்நாடு அரசானது, 25 கோடி ரூபாய் செலவில் ஏழு புதிய ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்களை அமைக்க உள்ளது.
- விழுப்புரம் மாவட்டத்தில் மயிலம் மற்றும் கண்டமங்கலம், விருதுநகர் மாவட்டத்தில் திருச்சுழி, புதுக்கோட்டை மாவட்டத்தில் கரம்பக்குடி, கன்னியாகுமரி மாவட்டத்தில் மேல்புரம், இராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ள சோளிங்கர் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தளி ஆகிய இடங்களில் இந்த மையங்கள் அமைக்கப்பட உள்ளன.
- ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையங்கள் ஆனது, வேளாண்மைத் துறை,

தோட்டக்கலை, வேளாண் சந்தைப்படுத்தல் மற்றும் வேளாண் வணிகம், விதைச் சான்றிதழ் மற்றும் வேளாண் பொறியியல் துறைகளை ஒரே தளத்தின் கீழ் கொண்டு உள்ளன.




# தேசியச் செய்திகள்

## MGNREGA ஊதிய உயர்வு 2025-26

| State/Union Territory | Wage Rate (Rs. per day) |
|---|---|
| Andhra Pradesh | 307 |
| Arunachal Pradesh | 241 |
| Assam | 256 |
| Bihar | 255 |
| Chhattisgarh | 261 |
| Goa | 378 |
| Gujarat | 288 |
| Haryana | 400 |
| Himachal Pradesh (Non-scheduled areas) | 247 |
| Himachal Pradesh (Scheduled areas) | 309 |
| Jammu and Kashmir | 272 |

- மத்திய அரசானது, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் (MGNREGS) கீழ், 2025-26 ஆம் நிதியாண்டிற்கான ஊதியத்தை சுமார் 2% முதல் 7% வரை உயர்த்தியுள்ளது.
- இதன் குறிப்பிட்ட மதிப்பில் NREGS ஊதியங்கள் ஆனது 7 ரூபாய் முதல் 26 ரூபாய் வரை அதிகரித்துள்ளன.

- இதில் ஆந்திரப் பிரதேசம், அருணாச்சலப் பிரதேசம், அசாம், நாகாலாந்து மற்றும் தெலுங்கானா ஆகிய ஐந்து மாநிலங்களில் NREGS ஊதியங்கள் 7 ரூபாய் உயர்த்தப் பட்டுள்ளன.
- ஹரியானாவில் அதிகபட்சமாக 26 ரூபாய் உயர்வு பதிவாகியுள்ளது.
- எந்தவொரு மாநிலத்திலும் NREGS ஊதியங்கள் ஒரு நாளைக்கு 400 ரூபாயை எட்டியது இதுவே முதல் முறையாகும்.
- நடப்பு நிதியாண்டில் (2024-25), கோவா மாநிலத்தில் அதன் முந்தைய ஆண்டு (2022-23) ஊதிய விகிதத்தை விட அதிகபட்சமாக 10.56% உயர்வு பதிவாகியுள்ளது என்பதோடு உத்தரப் பிரதேசம் மற்றும் உத்தரகாண்ட் ஆகியவற்றில் மிகக் குறைந்த அளவாக 3.04% உயர்வு பதிவாகியுள்ளது.
- தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்திற்கான ஒரு நாள் ஊதியம் என்பது 319 ரூபாயிலிருந்து 336 ரூபாயாக 5.33% என்ற அளவிற்கு அதிகரித்துள்ளது.

## வக்ஃப் திருத்த மசோதா 2025




- மாநிலங்களவையில் சுமார் 14 மணி நேர விவாதத்திற்குப் பிறகு, 128 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 95 பேர் எதிராகவும் வாக்களித்ததுடன் 2025 ஆம் ஆண்டு வக்ஃப் (திருத்த) மசோதாவினைப் பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.
- 288 உறுப்பினர்கள் ஆதரவாகவும் 232 பேர் அதற்கு எதிராகவும் வாக்களித்ததுடன் அது மக்களவையில் 12 மணி நேர விவாதத்திற்குப் பிறகு நிறைவேற்றப் பட்டுள்ளது.
- இதற்கு ஏப்ரல் 05 ஆம் தேதி குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்தார்.
- கடந்த ஆண்டு, இந்த மசோதாவானது ஜக்தம்பிகா பால் தலைமையிலான ஒரு கூட்டுப் பாராளுமன்றக் குழுவிற்கு (JPC) பரிசீலனைக்காகப் பரிந்துரைக்கப்பட்டது.
- இந்தப் புதிய மசோதாவானது, இந்தியாவில் வக்ஃப் சொத்துக்களின் நிர்வாகத்தினை நிர்வகிக்கும் 1995 ஆம் ஆண்டு வக்ஃப் சட்டத்தினைத் திருத்தியமைக்க முயல்கிறது.
- இது பாரம்பரியத் தளங்கள் மற்றும் தனிப்பட்ட சொத்து உரிமைகளைப் பாதுகாக்கும் அதே வேளையில் வக்ஃப் சொத்து நிர்வாகத்தினையும் நெறிப்படுத்துகிறது.
- வக்ஃப் சொத்துக்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் சட்டம் இயற்றப்பட்ட ஆறு மாதங்களுக்குள் அதற்காக நியமிக்கப்பட்ட இணைய தளத்தில் உடன் பதிவேற்றப்பட வேண்டும்.
- கூடுதலாக, இனி எந்தவொரு புதிய வக்ஃப் சொத்துப் பதிவுகளும் இந்த இணைய தளம் மூலம் அந்தந்த வக்ஃப் வாரியங்களுக்கு வேண்டி பிரத்தியேகமாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- வக்ஃப் சட்டத்தின் 40வது பிரிவு, ஒரு சொத்து வக்ஃப் சொத்தா என்பதை முடிவு செய்ய வக்ஃப் வாரியத்திற்கு அதிகாரம் அளிக்கிறது.
- வக்ஃப் தீர்ப்பாயத்தினால் அது ரத்து செய்யப் படாவிட்டால் அல்லது மாற்றப்படா விட்டால் அந்த வாரியத்தின் முடிவே இறுதியானது.
- தற்போது வக்ஃப் தீர்ப்பாயத்திடம் உள்ள இந்த அதிகாரத்தினை இந்த மசோதாவானது மாவட்ட ஆட்சியருக்கும் வழங்குகிறது.
- சட்டம் அமலுக்கு வரும் முன்போ அல்லது அதற்குப் பின்னரோ, வக்ஃப் சொத்தாக அடையாளம் காணப்பட்ட அல்லது அறிவிக்கப்பட்ட எந்தவொரு அரசாங்கச் சொத்தும் வக்ஃப் சொத்தாக கருதப்படாது.
- 1995 ஆம் ஆண்டு சட்டம் ஆனது, மாநில அரசால் நியமிக்கப்பட்ட ஒரு கணக்கெடுப்பு ஆணையரால் அவுகாஃப் (வக்ஃப் என்பதன் பன்மை) கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பரிந்துரைக்கிறது.
- திருத்த மசோதா, கணக்கெடுப்பு ஆணையருக்குப் பதிலாக மாவட்ட ஆட்சியர் அல்லது அவரால் அதிகாரப் பூர்வமாக என்று பரிந்துரைக்கப்பட்ட துணை ஆட்சியர் பதவிக்குக் குறையாத வேறு ஓர் அதிகாரியை நிர்ணயிக்கிறது.
- இந்தப் புதிய மசோதாவானது மாநில அளவிலான வக்ஃப் வாரியங்களுக்கு என்று ஒரு முஸ்லிம் அல்லாத தலைமை நிர்வாக அதிகாரியையும், குறைந்தது இரண்டு முஸ்லிம் அல்லாத உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டி மாநில அரசிற்கு அதிகாரமளிக்க முன்மொழிகிறது.
- 1963 ஆம் ஆண்டு வரம்பு நிர்ணயச் சட்டம் வக்ஃப் சொத்துக்களுக்குப் பொருந்தாது என்று குறிப்பிடும் 1995 ஆம் ஆண்டு சட்டத்தின் 107வது பிரிவினை நீக்குவதற்கு இந்த மசோதா முன்மொழிகிறது.

## இந்தியாவில் குழந்தைத் தத்தெடுப்புகள் 2024-25





- 2024-25 ஆம் நிதியாண்டில் சுமார் 4,515 தத்தெடுப்புகளுடன் இந்தியாவில் மிகவும் அதிக எண்ணிக்கையிலான குழந்தைத் தத்தெடுப்புகள் பதிவாகியுள்ளன என்பதோடு இது

கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிகமாகும்.

- இந்த மொத்தக் குழந்தைத் தத்தெடுப்புகளில் சுமார் 3,950 உள்நாட்டுத் தத்தெடுப்புகள் மற்றும் 565 சர்வதேசத் தத்தெடுப்புகள் அடங்கும்.
- இதன் முந்தைய அதிகபட்சப் பதிவானது 2012-13 ஆம் ஆண்டில் பதிவான சுமார் 4,354 தத்தெடுப்புகள் ஆகும்.
- மத்தியத் தத்தெடுப்பு வள ஆணையம் (CARA) ஆனது புதிதாக அடையாளம் காணப் பட்ட 8,598 குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கான தகுதிக் குழுவில் சேர்த்தது.
- கூடுதலாக, தத்தெடுப்புச் செயல்முறையை மிக நன்குச் சீராக்க மாநில அரசுகளுடன் ஒருங்கிணைந்து 245 புதிய தத்தெடுப்பு முகமைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- CARA ஆணையத்தின் படி, தற்போது தத்தெடுப்பை எதிர்நோக்கி சுமார் 33,000க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர், அதே நேரத்தில் சுமார் 2,141 குழந்தைகள் மட்டுமே சட்டப்பூர்வமாகத் தத்தெடுப்புக்குக் கிடைக்கப் பெறுகின்றனர்.

# பொருளாதாரச் செய்திகள்

## வர்த்தகக் கண்காணிப்பு காலாண்டு அறிக்கை




- நிதி ஆயோக் அமைப்பானது, நிதி ஆயோக் வர்த்தகக் கண்காணிப்பு காலாண்டு அறிக்கையை புது டெல்லியில் வெளியிட்டுள்ளது.
- 2025 ஆம் நிதியாண்டின் ஜூலை முதல் செப்டம்பர் மாதம் வரையிலான இரண்டாவது காலாண்டிற்கான காலாண்டு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.
- 2023 ஆம் ஆண்டின் இதே காலக் கட்டத்துடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டு ஏப்ரல்-செப்டம்பர் மாதங்களில் இந்தியாவின் மொத்த வர்த்தகமானது சுமார் 5.67 சதவீதம் வளர்ந்துள்ளதாக அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.
- இதன்படி ஏற்றுமதிகளானது ஆண்டிற்கு சுமார் 5.23 சதவீதம் அதிகரித்துள்ளதுடன், இறக்குமதிகள் ஆண்டிற்கு 6.07 சதவீதம் அதிகரித்து வருகின்றன.
- கடந்த ஆறு மாதங்களில், மாதத்திற்கு என சராசரியாக 35.4 பில்லியன் டாலர்கள் என்ற மதிப்பில் நாட்டின் சரக்கு ஏற்றுமதி மிக நிலையானதாக உள்ளது என்றும் அறிக்கை கூறுகிறது.
- ஆகஸ்ட் மாதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பைத் தவிர, இறக்குமதிகள் ஆனது சராசரியாக

57.8 பில்லியன் டாலர்களாக இருந்தன.

# முக்கிய தினங்கள்

## உலக மதியிறுக்கப் பாதிப்பு விழிப்புணர்வு தினம் - ஏப்ரல் 02




- இத்தினமானது மதியிறுக்கப் பாதிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும், இந்த நிலையில் உள்ளவர்களின் பல்வேறு உரிமைகளைப் பற்றி விவாதிப்பதையும் ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ஆட்டிசம் என்பது ஒரு நபரின் சமூக தொடர்பு மற்றும் தொடர்பு கொள்ளும் திறனை பாதிக்கும் ஒரு வளர்ச்சிக் கோளாறு ஆகும்.
- மனநல மருத்துவரான யூஜென் ப்ளூலர் 1911 ஆம் ஆண்டில் "ஆட்டிசம்" என்ற சொல்லை உருவாக்கினார்.
- 2025 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "Advancing Neurodiversity and the UN Sustainable Development Goals (SDGs)" என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★